செ.வெ.எண்: 1003 19.11.08

# பத்திரிகை செய்திக் குறிப்பு

மாநகர மர வளர்ப்புத் திட்டம், தமிழ்நாடு வனத்துறையினரால் 2007–08ம் ஆண்டிலிருந்து சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் குறிக்கோள்கள்**

1. மக்களிடையே சுற்றுச்சூழல் மற்றும் பசுமை வளத்தைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
2. வனங்களுக்கு வெளியே மரங்களின் பரப்பளவை அதிகரித்தல்
3. காற்று, நீர், வான்வெளி ஆகியவை மாசுபடுவதைத் தடுத்தல்
4. மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளைப் பசுமைப்படுத்தி அழகு பெறச் செய்தல்
5. சுற்றுச்சூழலை மேம்படுத்துதல், வெப்பத்தைத் தணித்தல், பறவைகளுக்குப் புகலிடம் முதலியன

**மாநகர மரம் வளர்ப்புத் திட்டம் பற்றிய விளக்கம்**

மாநகர் மற்றும் புற நகர் பகுதிகளில் 2007–08ம் ஆண்டில் மொத்தம் 17,676 உயரமான மரக் கன்றுகள் நடப்பட்டது. 2008–09ம் ஆண்டில் நடப்படவேண்டிய 26,550 உயரமான மரக் கன்றுகளில் இதுவரை 12,500 உயரமான மரக் கன்றுகள் நட்டு முடிக்கப்பட்டுள்ளது. இந்த மரக் கன்றுகள் இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கப்படும்.

குடியிருப்போர்கள் சங்கம், தொண்டு நிறுவனங்கள், எக்சனோரா மற்றும் மாநகர மன்ற உறுப்பினர்கள் இந்தத் திட்டத்திற்கு பேராதரவு அளித்து வருகின்றனர். 13.11.2008 அன்று மாண்புமு வனத்துறை அமைச்சர் அவர்களும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்களும் இத்திட்டத்தின் மூலம் மைலாப்பூர் மற்றும் தரமணி பகுதிகளில் நடப்பட்ட மரக் கன்றுகளைப் பார்வையிட்டனர்.

19.11.2008ம் நாளன்று மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயருடன் கோட்டம்–1ல் கீழ்க்கண்ட இடங்களில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளைப் பார்வையிடுகின்றனர். இந்த வார்டு மாநகர மன்ற உறுப்பினர் திருமதி. எல். புவனேஸ்வரி சங்கரலிங்கம் அவர்கள் வரவேற்று பணிகளைப் பற்றி விளக்குகின்றார். முதன்மை செயலர், வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் முனைவர். என். சுந்தரதேவன், இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் திரு. சி.கே. ஸ்ரீதரன், இவப., தலைமை வனப்பாதுகாவலர் (சமூகக்காடுகள்) திரு. ரு. குணசேகரன், இவப., வனப்பாதுகாவலர், சென்னை மண்டலம் திரு. வெ. பிரபாகரன், இவப., ஆகியோர் உடனிருந்து இத்திட்டம் பற்றி எடுத்துக் கூறுவர்.

**பார்வையிடும் இடங்கள்**

1. யூனியன் கார்பைட் காலனி 2. வெங்கடேஸ்வரா நகர் பகுதி 1 & 2, 3. ஸ்ரீராம் நகர், 4. மணலி சாலை மற்றும் 5. நாராயணசாமி தோட்டம்.

# நகர்புற வனவியல்

காற்று, நீர் மற்றும் ஒலி மாசுக்களின் எதிர்மறை விளைவுகளைக் கட்டுப்படுத்தவும் நகரத்தின் அழகான தோற்றத்தினை மேம்படுத்தவும் ஒரு நகர்புற வனவியல் திட்டம் 2007–08 ஆம் ஆண்டு முதல் வனத்துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2) இத்திட்டத்தின் கீழ், முக்கிய சாலை ஓரங்களிலும் வேம்பு, புங்கன், மகிழம், மஞ்சக்கொன்னை, சரக்கொன்றை, பாதாம், தூங்குமுஞ்சி போன்ற மர வகைகள் நடப்பட்டுள்ளன.

## 2007–08

- இத்திட்டத்திற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் ரூ.300/– லடசமும் மாநில அரசு ரூ.100/– லட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது.
- 2007–08 ஆம் ஆண்டில் 1,17,647 மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டது.
- நடபபட்டவை 85386 மரக்கன்றுகள். ரூ.246.04 லட்சம் செலவில் சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் கோவை மாநகராட்சிகளிலும் அவற்றை சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் நடப்பட்டுள்ளன.
- எஞ்சியுள்ள 32251 மரக்கன்றுகள் சென்னை மற்றும் திருநெல்வேலி மாநராட்சிகளில் 2008–09 ஆம் ஆண்டு நடப்பட உள்ளது.

## 2008–09

- இத்திட்டத்திற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் ரூ.150/– லட்சமும் மாநில அரசு ரூ.100/– லட்சமும் நிதி உதவி வழங்க அரசு ஆணையுட்டுள்ளது.
- 2008–09 ஆம் ஆண்டில் 48050 மரக்கன்றுகள் ரூ.403.96 தமிழகத்தின் பத்து மாநகராட்சிப் பகுதிகளிலும் அவற்றை சுற்றியுள்ள புறநகர் பகுதிகளிலும் நடப்பட உள்ளது.

---

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் இத்திட்ட செயலாக்க விவரம் வருமாறு:

- 2007–08 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள புறநகர் பகுதியில் ரூ.68.15 லட்சம் செலவில் 17676 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.
- 2008–09 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள புறநகர் பகுதியில் ரூ.144.87 லட்சம் செலவில் 26550 மரக்கன்றுகள் நடப்பட உள்ளன. இதுவரையில், 12500 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை 9